சட்ட மன்றத்திற்குள்ளே காவலர்களை நியமித்திருப்பதைப் பார்க்கும்போது இது ஒரு புறக் காவல் நிலையம்போல் தோன்றுகிறது. இது நடைமுறைக்குச் சரியாக வராது. இனிமேலாவது பேரவைத் தலைவர் அவர்கள் சட்ட மன்றப் பணியாளர்களை நியமிக்கவும், காவலர்கள் சட்ட மன்ற எல்லைக்குள் இல்லாமல் இருக்கவும், ரகசிய போலீஸ் நடமாடாமல் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா என்கிற ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொன்னது கவனிக்கப்படும்.

(3) தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சட்டப் பேரவை சார்ஜண்ட் அமைச்சரின் பாதுகாவலரால் பயமுறுத்தப்பட்டது பற்றி எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : சென்ற சனிக்கிழமை குறிப்பிட்ட பிரச்சினையை எழுப்பியிருக்கிறேன். அசெம்பிளி சார்ஜெண்ட் ஒரு அமைச்சருடைய பாதுகாவலரால் பயமுறுத்தப்பட்டார் என்பது பற்றி எழுப்பிய நேரத்தில் அப்போது உதவி சபாநாயகர் அவர்கள் அது சம்பந்தமாக முடிவெடுத்து அறிவிப்பதாகச் சொன்னார்கள். அது என்றைக்கு அறிவிக்கப்படும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* *

திரு. கோவை செழியன் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் பாயிண்ட் ஆப் ஆர்டரா? இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. இது நிகழ்ச்சிக்குறிப்பில் வருது.

* *

*திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய உறுப்பினர் சௌந்தரபாண்டியன் கூறியமாதிரி, நேற்றைய தினம் எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது. சட்ட மன்றத்தின் தெற்கு வாசலில் வரும்பொழுது அமைச்சர்களின் காவலர்கள் என்னை மறித்தார்கள். பக்கத்தில் இருப்பவர் இவர் ஒரு உறுப்பினர் என்று சொன்ன பிறகுதான் அனுமதித்தார்கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1975 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை மானியக் கோரிக்கையின் மீது ஒரு மணி நேரத்தில் விவாதத்தை முடித்து விட்டு அடுத்த டிமாண்டை எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. இப்போது மணி 10-10. 11-10-க்குள் விவாதம் முடியவேண்டும்.

(5) துணை மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு அதிக வாய்ப்புகள் அளிப்பது குறித்த வேண்டுகோள்.

Dr. H. V. HANDE: Mr. Speaker, Sir, I have been trying to point out in this House several times that so far as the Supplementary Budget is concerned, this House does not get adequate opportunity to discuss it. In fact, yesterday in the Legislative Council for nearly three hours they were able to discuss it. Sir, I am not casting aspersion on the other House. What I am trying to point out is that the opportunity given to the other House to discuss it at length is not given to this House. This has been going on for a number of years and I have been continuously battling on this aspect of the matter. Sir, after the discussion on the Supplementary Budget, we will pass it and then the Supplementary Budget will come in the form of an Appropriation Bill and when that Bill is brought before the House we are not given an opportunity to discuss it even though it is a Money Bill. Even though the other House has no right to vote on the Money Bill, they have been given ample opportunity to discuss it at length and any number of Members speak on it. I have been continuously fighting on this point and I have brought it to your kind notice a number of times. Sir, I am very much hurt and pained that this House is being neglected in this way. You kindly look into this aspect of the matter and take whatever decision you like.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன கருத்தை உணர்ந்து கொள்கிறேன். மேலவையில் இந்த டிமான்ட்ஸ் பெரு வாரியாக விவாதிப்பதில்லை. அங்கே பெரிய அளவில் விவாதம் செய்திருக் கலாம். விவாதம் அதிக நேரம் கூடாது என்பது அல்ல. பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் முதலில் இதற்கு இவ்வளவு நேரம் என்று முடிவு எடுத்து விட்டு அதன்படி நடக்க வேண்டும். அம்முடிவின்படி துணை மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும் ஒரு மணி நேரத்தில் முடித்துக் கொள்வது என்பதாகும். டாக்டர் ஹாண்டே அவர்களின் கருத்தை கட்சித் தலைவர்களிடம் சொல்லி பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் அந்த முடிவை எடுத்துக்கொள்ள வேண்டும். நான் உறுப்பினர்களின் உரிமை களைக் காப்பாற்றுவதற்குத் தயாராக இருக்கிறேன். அங்கே முடிவு எடுத்துவிட்ட பிறகு அதன்படிதான் நடக்க வேண்டும்.